<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 128/2017**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>

<u>வாக்குமூலம் – பி.வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025ஆண்டு நவம்பர் மாதம் 3ம் நாள் சாட்சியம்.

---

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 7ம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 15.08.1922 தேதியிட்ட பேச்சியம்மாள் பெயரிலுள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்.

2. 26.07.2000 தேதியிட்ட பழனியம்மாள் என்கிற வீரம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல்.

3. 28.06.2001 தேதியிட்ட பழனியம்மாள் என்கிற வீரம்மாள் என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல்.

4. 22.02.2005 தேதியிட்ட சண்முகன் பெயரில் வீரம்மாளின் மற்ற வாரிசுகள் எழுதிக்கொடுத்த பொது அதிகாரப்பத்திரம் பதிவு நகல்.

5. 03.04.2006 தேதியிட்ட சண்முகம் என்பவர் தனக்காகவும் பொது அதிகாரம் வழங்கிய மற்றவர்களுக்காவும் சேர்த்து மணிகண்டன் பெயரில் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் பதிவு நகல்.

6. 24.02.1997 தேதியிட்ட பொன்னியம்மாள் மகன் பொன்னுசாமி என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல்.

7. 02.04.1992 தேதியிட்ட பொன்னுசாமி என்பவர் தனது மகள் வழிப்பேத்தி நாகரத்தினம் என்பவருக்கு எழுதி வைத்த உயில் சாசனம் சான்றிட்ட நகல்.

8. 22.09.2025 தேதியிட்ட தவாச்சொத்தை பொறுத்து பழனியம்மாள் என்கிற வீரம்மாள் என்பவர் பெயரிலுள்ள கணிணி சிட்டா இணையதள பதிவிறக்க நகல்.

9. பேச்சியம்மாள் பெயரிலுள்ள வீட்டுவரி இரசீது (7 எண்ணிக்கை) அசல்.

10. பேச்சியம்மாள் பெயரிலுள்ள குடிநீர் கட்டண இரசீது (6 எண்ணிக்கை) அசல்.

11. 06.01.1996 தேதியிட்ட பழனியம்மாள் பெயரிலுள்ள வீட்டுவரி இரசீது அசல்.

12. தாவாச்சொத்தை பொறுத்து மணிகண்டன் பெயரிலுள்ள வீட்டுவரி இரசீதுகள் (6 எண்ணிக்கை) அசல்.

13. தாவாச்சொத்தை பொறுத்து மணிகண்டன் பெயரிலுள்ள குடிநீர் கட்டண இரசீதுகள் (6 எண்ணிக்கை) அசல்.

14. தாவாச்சொத்தை பொறுத்து மணிகண்டன் பெயரிலுள்ள மின் இணைப்பு எண்.226 005 1383–க்கு உண்டான மின்கட்டண இரசீதுகள் (6 எண்ணிக்கை) அசல்.

15. 11ம் பிரதிவாதி பழனிசாமி மனைவி வசந்தாமணி பெயரிலுள்ள வீட்டு வரி இரசீது (3 எண்ணிக்கை) அசல்.

16. வசந்தாமணி பெயரிலுள்ள மின் இணைப்பு எண்.03 226 005 615–க்கு உண்டான மின்கட்டண இரசீதுகள் (6 எண்ணிக்கை) அசல்.

17.11.03.2017 தேதியிட்ட வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல்.

18. 23.03.2017 தேதியிட்ட பிரதிவாதிகள், வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல்.

19. 7ம் பிரதிவாதி மணிகண்டனின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்ட நகல்.

20. 7ம் பிரதிவாதி மணிகண்டனின் குடும்ப அட்டை சரிபார்க்கப்பட்ட நகல்.

21. 11ம் பிரதிவாதி பழனிசாமி ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்ட நகல்.

22. 11ம் பிரதிவாதி பழனிசாமி குடும்ப அட்டை சரிபார்க்கப்பட்ட நகல்.

ஆகியவற்றை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **பி.வா.சா.ஆ. முதல் பி.வா.சா.ஆ.** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.03 18:12:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.